**செய்தி வெளியீடு எண்: 655** **நாள்: 02.11.2012**

**தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்**
சென்னை–600 028.
**<u>தமிழில் புதிய நாட்டிய–நாடகங்கள் தயாரித்திட நிதியுதவி வழங்கும் திட்டம்</u>**

தமிழில் புதிய நாட்டிய–நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றம் செய்ய நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ், தமிழகத்தில் உள்ள நாட்டியக் கலைஞர்கள், கலை நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்க்கப்படுகின்றது.

**<u>விண்ணப்பிப்பதற்கான தகுதிகள் விவரம்</u>**

1. ஏற்கனவே மேடையேற்றம் செய்யப்படாத புதிய நாட்டிய நாடகங்களாக இருத்தல்வேண்டும்.
2. நாட்டிய–நாடகங்கள் தமிழ்ப் பண்பாட்டினையும், மரபினையும் பிரதிபலிப்பதாக அமையப் பெறவேண்டும்.
3. பதிவு பெற்ற கலை நிறுவனமாக இருத்தல்வேண்டும்.
4. நிதியுதவி பெற விரும்பும் நாட்டியக் கலை நிறுவனங்கள் / கலைஞர்கள், நாட்டிய நாடகத்திற்கான கதைச் சுருக்கம், காட்சியமைப்புகள், கலை நிறுவனத்தைப் பற்றிய விவரங்கள் இணைத்தல் வேண்டும்.

இதற்கான விண்ணப்பப் படிவங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றது. தபால் மூலம் விண்ணப்பம் பெற விரும்பும் கலைஞர்கள் / கலை நிறுவனங்கள் சுயமுகவரியிட்ட ரூ.5/–க்கான தபால் தலை ஒட்டி மன்றத்திற்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

நிதியுதவி பெற விழையும் நாட்டிய கலைநிறுவனங்கள் / கலைஞர்கள் விண்ணப்பப் படிவத்துடன் மேற்சொன்ன விவரங்களுடன் பின்வரும் முகவரிக்கு 30.11.2012 தேதிக்குள் அனுப்பிவைக்கவேண்டும்.

உறுப்பினர்–செயலாளர்,
தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்,
31, ‘‘பொன்னி‘‘ பி.எஸ்.குமாரசாமி ராஜா சாலை,
சென்னை–600 028.
(044 - 24937471)

**வெளியீடு:-**

**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**